***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No. 98/2017 – P.W.7 LW10.***

| | |
|---|---|
| *Name* | ஆனந்தகிருஷ்ணன் - காவல் ஆய்வாளர்<br>சிறப்பு நுண்ணறிவு பிரிவு, தஞ்சாவூர் |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *46* |

**எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 18.05.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்சமயம் சிறப்பு நுண்ணறிவு பிரிவு, தஞ்சாவூரில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

மன்னார்குடி தாலுக்கா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது சிறப்பு அலுவலாக திருவாரூர் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பணியாற்றி வரும்போது மன்னார்குடி நகர காவல் நிலைய குற்ற எண்.235/2015 இதச பிரிவு 380 ன் கீழ் வழக்கின் எதிரிகள் மற்றும் களவு சொத்துக்களை தேடிவரும்போது 22.08.2015 ம் தேதியன்று திருவண்ணாமலை காவல் துறையினர் மேற்கண்ட மன்னார்குடி நகர காவல் நிலைய குற்ற எண்.235/2015 வழக்கின் குற்றவாளிகளை கைது செய்திருப்பதாக கிடைத்த தகவலின் படி நான் திருவண்ணாமலை தாலுக்கா காவல் நிலையத்தில் இருந்த மேற்கண்ட வழக்கின் எதிரிகள் கிருஷ்ணவேணி, செல்வி, அலமேலு ஆகியோரை விசாரித்தபோது மேற்கண்ட மன்னார்குடி நகர காவல் நிலைய குற்ற எண்.235/2015 வழக்கில் ஈடுபட்டதும், அதனுடைய களவு சொத்தான 15 1/2 பவுன் நகைகளை தன்னுடைய மற்ற வழக்குகளுக்கு ஆஜரான

திருப்பத்துர் சார்ந்த வசீகரன் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளதாக கேள்விப்பட்டு அவரை தொடர்புகொள்ள முயற்சித்தும் தொடர்புகொள்ள இயலவில்லை. இவ்விபரங்களை மன்னார்குடி நகர காவல் நிலைய ஆய்வாளர் அவர்களிடம் கூறியதின் பேரில் இவ்வழக்கு எதிரியான கிருஷ்ணவேனி என்பவரை 02.09.2015 ம் தேதி போலீஸ் காவலுக்கு எடுத்து விசாரித்தபோது மேற்கண்ட மன்னார்குடி காவல் நிலைய குற்ற எண்.235/2015 ன் வழக்கின் குற்றத்தை ஒப்புக்கொண்டும், இந்த திருட்டு சொத்தை திருப்பத்தூர் வழக்கறிஞர் வசிகரனிடம் கொடுத்துள்ளதாக கூறினார். இதுதொடர்பாக மேற்கண்ட திருட்டு சொத்தை பெறுவதற்காகவும், 02.09.2015 ம் தேதியன்று திருப்பத்தூர் சென்று வழக்கறிஞர் வசிகரனிடம் தொடர்பு கொள்ள முயற்சித்தும், முடியாததால் மன்னார்குடி நகர காவல் நிலைய ஆய்வாளர் போலீஸ் காவலில் இருந்த எதிரி கிருஷ்ணவேனி மூலமாக மேற்கண்ட வழக்கறிஞர் வசிகரனை தொடர்பு கொண்டு பேசியதின் பேரில் 03.09.2015 ம் தேதி பகல் 12.00 மணிக்கு திருப்பத்தூர் பேருந்து நிலையம் அருகில் மேற்கண்ட மன்னார்குடி நகர காவல் நிலைய குற்ற எண். 235/2015 வழக்கு சொத்தான 15 1/2 பவுன் நகைகள்
(2 பவுன் செயின் - 4, 1 1/2 பவுன் கைசெயின் - 2, 1 பவுன் செயின் - 4, 1/2 செயின் -1 ) ஆகியவற்றை வசிகரனிடம் இருந்து பெற்றுக்கொண்டு மன்னார்குடி நகர காவல் நிலைய ஆய்வாளரிடம் 03.09.2015 ம் தேதியன்று மாலை 03.00 மணியளவில் ஒப்படைத்தேன். இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மன்னார்குடி நகர காவல் ஆய்வாளரின் வட்ட சரகத்திற்கு உட்பட்டது தான் மன்னார்குடி தாலுக்கா காவல் நிலையம் என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சிறப்பு அலுவலாக திருவாரூர் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பணியாற்றியதாக சொன்ன விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் கூறியிருக்கிறேனா என்றால் கூறியிருக்கிறேன். நான் காவல் உதவி ஆய்வாளராக இருப்பதால் புலன் விசாரணை தொடர்பாக யார் ஒருவருடைய அனுமதிக்காக காத்திருக்கவேண்டிய து இல்லை. நான் செய்த சிறப்பு அலுவலை பொறுத்து புலன் விசாரணைக்கு ஒரு பகுதியாகவே இருந்து செய்பட்டு இருக்கிறோம் என்றால் ஆமாம்.

முதல் விசாரணையில் நான் சொன்ன திருவண்ணாமலை தாலுக்கா காவல் நிலையத்தில் இருந்த மேற்கண்ட வழக்கின் எதிரிகள் கிருஷ்ணவேனி, செல்வி, அலமேலு ஆகியோரை விசாரித்தபோது மேற்கண்ட மன்னார்குடி நகர காவல்

நிலைய குற்ற எண்.235/2015 வழக்கில் ஈடுபட்டதும், அதனுடைய களவு சொத்தான 15 1/2 பவுன் நகைகளை தன்னுடைய மற்ற வழக்குகளுக்கு ஆஜரான திருப்பத்துர் சார்ந்த வசீகரன் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளதாக கேள்விப்பட்டு அவரை தொடர்புகொள்ள முயற்சித்தும் தொடர்புகொள்ள இயலவில்லை என்ற விபரத்தை ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

அதேபோல் நான் முதல் விசாரணையில் சொன்ன வழக்கறிஞர் வசிகரன் என்பவரை தொடர்பு கொள்ள முயற்சித்ததாகவும், அவரை தொடர்புகொள்ளமுடியாத விபரத்தை ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதேபோல் முதல் விசாரணையில் 02.09.2015 ம் தேதியன்று திருப்பத்தூர் சென்று வழக்கறிஞர் வசிகரனை தொர்புகொள்ள முயற்சித்தேன் என்ற சங்கதியையும் ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

மன்னார்குடி நகர காவல் நிலைய ஆய்வாளர் போலீஸ் காவலில் இருந்த எதிரி கிருஷ்ணவேனி மூலமாக மேற்கண்ட வழக்கறிஞர் வசிகரனை தொடர்பு கொண்டு பேசியதாக சொன்ன சங்கதியை ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

03.09.2015 ம் தேதி பகல் 12.00 மணிக்கு திருப்பத்தூர் பேருந்து நிலையம் அருகில் மேற்கண்ட மன்னார்குடி நகர காவல் நிலைய குற்ற எண். 235/2015 வழக்கு சொத்தான 15 1/2 பவுன் நகைகள் (2 பவுன் செயின் - 4, 1 1/2 பவுன் கைசெயின் - 2, 1 பவுன் செயின் - 4, 1/2 செயின் -1 ) ஆகியவற்றை வசிகரனிடம் இருந்து பெற்றுக்கொண்டு மன்னார்குடி நகர காவல் நிலைய ஆய்வாளரிடம் 03.09.2015 ம் தேதியன்று மாலை 03.00 மணியளவில் ஒப்படைத்தேன் என்ற விபரத்தை விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

திருப்பத்தூர் என்ற ஊர் இருப்பது பழைய ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம். தற்போது திருப்பத்தூர் தனி மாவட்டமாக உள்ளது. மன்னார்குடியில் இருந்து தோராயமாக 400 கிமீ இருக்கும் என்றால் சரியல்ல. 300 கிமீ இருக்கலாம். சாதரணமாக இந்த 300 கிமீ தொலைவை ஒரு நான்கு சக்கர வாகனத்தில் வேகமாக பயணித்தால் 6 மணிநேரம் ஆகுமா என்றால் இல்லை. 5 மணிநேரத்தில் சென்றுவிடலாம்.

வழக்கறிஞர் வசிகரனிடம் நான் பெற்றதாக சொல்லக்கூடிய வழக்கின் சொத்தை கைப்பற்றும்போது ஏதேனும் மகசர் தயார் செய்தேனா என்றால் இல்லை. அதேபோல் படிவம் 91 போன்ற வேறு ஏதேனும் வழக்கு சொத்தை பெற்றதாக சொல்லப்படும் நிலையில் அத்தாட்சி ஆவணம் பெறபட்டதா என்றாலும் ஏதேனும் தயார் செய்தோமா என்றால் இல்லை.

முதல் விசாரணையில் 15 1/2 பவுன் தனித்தனியான நகை மற்றும் எடை குறிப்பிட்ட நிலையில் அதனை நான் நிறுத்து பார்த்து ஏதேனும் பெற்றேனா என்றால் இல்லை. 03.09.2015 ம் தேதியன்று மாலை 03.00 மணிக்கு மன்னார்குடி நகர காவல் நிலைய ஆய்வாளர் வசம் வழக்கின் தடயச்சொத்துக்களை ஒப்படைத்ததாக சொல்லப்படும் சங்கதியை என்னுடைய விசாரணையில் குறிப்பிட்டுயிருக்கிறேன் என்றால் சரிதான். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

சாதாரணமாக நான் காவல் உதவி ஆய்வாளராக இருப்பதால் ஒரு நபரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ய முடியும். அவ்வாறு இருக்கையில் நான் இந்த வழக்கில் வழக்கறிஞர் வசிகரனிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொடுக்கவோ, வழக்கு சொத்து தொடர்பாக ஏதேனும் தனிஅறிக்கையோ ஆய்வாளர் வசம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி இல்லை.

மன்னார்குடியில் இருந்து திருப்பத்தூர் என்ற ஊருக்கு சென்று வரவேண்டும் என்றால் தோராயமாக 600 கிமீ மேல் ஆகும் என்றால் சரிதான். முதல் விசாரணையில் நான் சொன்ன வகையில் திருபத்தூர் சென்றதாகவும், தடயபொருடகளை பெற்று வந்ததாக சொல்வது வழக்கிற்காக சொல்கிறேன் என்றும், முதல் விசாரணையில் சொன்ன வகையில் தடயச்சொத்துக்கள் என்னால் பெற்றுவரப்படவில்லை என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.